# ஒரு கோப்பைத் தேநீர்



தமிழ்நெஞ்சம்

# வணக்கம் நண்பர்களே

ஒரே ஒரு வேண்டுகோள் 12 மணிநேரத்திற்குள் பொழிந்த
கவிதைகள் என்னைத் தக்க முக்காடச் செய்து விட்டன.
ஒரு நூறு கவிதைகளுடன் தொகுப்பை நிறைவுசெய்யலாம்
என எண்ணினால் அதுமுடியாமல் போனது.
144 என்பது ஊரடங்கைக் குறிப்பிடும் என்பதால்
143 உடன் நிறுத்தி விட்டேன். சென்னை சென்று
ஒரு நண்பரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது
அவர் வழங்கிய தேநீர்க் கோப்பையை என் அலைபேசி
வழியாகப் படமெடுத்திருந்தேன். அந்தப் படத்திற்கு வந்த
கவிதைகளின் தொகுப்பே இது. சுவைத்து மகிழுங்கள்
தேநீர்க் கவிதைகளை; இனிய நன்றி.

இது போல் மாதம் ஒரு தொகுப்பை இடையறாப்
பணிகளுக்கிடையில் இன்முகத்தோடு செய்யும்
தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கு இனிய நன்றி

இராம வேல்முருகன் வலங்கைமான்

# ஒரு கோப்பைத் தேநீர்

## குறுங்கவிதைகளின் தொகுப்பு

தொகுப்பு

**இராம.வேல்முருகன் வலங்கைமான்**

**தமிழ்நெஞ்சம்**

59, rue des Entrechats, 95800 Cergy - France

நூல்பெயர்  : ஒரு கோப்பைத் தேநீர்
குறுங்கவிதைகளின் தொகுப்பு
வகை : குறுங்கவிதை
தொகுப்பு : **இராம.வேல்முருகன் வலங்கைமான்**
பதிப்பு : **தமிழ்நெஞ்சம் அமின்**
முதல் பதிப்பு : அக்டோபர் 2022
பக்கங்கள் : 60



# உள்ளே...


1. கவிஞர் சிவ எம்கோ, வாழப்பாடி
2. ர. உஷாராணி, சேலம்
3. வள்ளல் இராமமூர்த்தி
4. தமிழ் பாரதி
5. மைதிலி தயாளன்
6. ஜெயசீலி தயாளன்
7. மோகனகவி
8. கேசவதாஸ் சுசீந்திரம்
9. முத்து நகர் முத்து குமார்
10. குமாரி சேது
11. தாராபாய் மதனகோபால்
12. பாளை பால்கி
13. சக்திராஜ்
14. ம. பழனிச்சாமி, திருப்பூர்
15. சௌ நாகநாதன்
16. முருகேஸ்வரி ஆறுமுகம்
17. சென்னிமலை சீனிவாசன்
18. கு. கதிரேசன், திருச்சி
19. ஜி அசோகன், பம்மல்
20. மா. பாலசுந்தரம்
21. இராஜ்குமார் சிவன்
22. இரா. பேச்சியம்மாள், கரிசல் கானம்
23. கே பி துரைசாமி
24. இரா தேவி
25. மன்னைஜீவி

26. நெடுமுடி வேந்தன், சென்னை
27. இரா லெட்சுமணகுமார், ஈரோடு
28. முத்தமிழ்செல்வி, நத்தம்
29. பிரின்ஸ் லூயிஸ் பாஸ்டியர்
30. மேலூர் முருகானந்தம்
31. பசீர்அகமது
32. ராசா
33. மணிமாறன்
34. மருத்துவகவிஞர் பெ.தி.சுகுமார்
35. மு. வா. பாலாஜி
36. ஜெ பாக்கியவான், புள்ளம்பாடி
37. விஜயா குமரன்
38. ராமதாசு தென்பசியார்
39. ஹரிகுமார் வேலாயுதன்
40. தாரமங்கலம் முத்துச்சாமி
41. இராஜா கிருஷ்ணன்
42. வள்ளிக்குறத்தியார்
43. மகேஷ்கண்ணன்
44. கருங்கல் கி கண்ணன்
45. பொ. முத்துராக்கு
46. பொ. சுப்புலட்சுமி, தேவகோட்டை
47. சோமசுந்தர்ராஜன்
48. அருண்மொழி
49. சி. அ. வ. இளஞ்செழியன்
50. சுந்தர ராஜ சாரதி

51. தனராஜ் பாப்பணன்
52. உஷா வரதராசன்
53. ஹாரூண் ரசீத்
54. மகேஸ்வரி முருகையா
55. கா சதாசிவம்
56. ஏஞ்சல் சோபிதா
57. குளோரி சக்தி
58. கவிஞர் பொற்பனை சுப்பிரமணியன்
59. ப. முருகன் யோகீஸ்வரர்
60. சிந்தை வாசன்
61. வேங்கை மார்பன்
62. குமரன் அம்பிகா
63. தமிழீழநேசன்
64. விஜி கல்யாணி
65. முருகன் ஊர்க்காவலன்
66. ஆன்றனி அமலா
67. மருத்துவர் ஜெயக்குமார் பலராமன்
68. சாக்கை. பொன்னழகு
69. வி. கண்ணையன்
70. அ. பாண்டுரங்கன்
71. பொன் க. முத்து
72. சியாமளா பாலகிருஷ்ணன்
73. கவிதைகள் புதுக்கவிஞன்
74. ஆனந்த் கந்தசாமி
75. திருமதி செ. தெய்வேந்திரமூர்த்தி. இலங்கை

76. சுஜாதா அருணாசலம்
77. க.தங்கவேலு
78. கி. மா. கனகராசன். சூலூர்
79. இந்திராணி தங்கவேல்
80. புகழேந்தி
81. சோ. மீனாட்சிசுந்தரம்
82. முத்து ராஜசேகரன்
83. செந்தூர் குமார்
84. சு. கேசவன்
85. மாரியப்பன் ஊர்க்காவலன்
86. ஆண்டாங்கோயில் தேவநாதன்
87. அம்பிகா குமரன்
88. சு வெ சுவாமி
89. செல்வபாண்டியன்
90. ரா. ரேகா ராஜகுமார்
91. வா. சண்முகம்
92. ஓசூர் மணிமேகலை
93. கோபால் சத்தியமங்கலம்
94. கவிஞர் பி புகழேந்தி
95. பாண்டிச்செல்வி கருப்பசாமி
96. கவிஞர் செகவான்
97. விசு இமானுவேல்
98. மருத்துவர் தேவி
99. அ. வள்ளிபாபு
100. யமுனாராணி

101. கோவி சண்முகசுந்தரம்
102. ஆர் குணசேகரன்
103. தென்றல்கவி
104. செண்பக ஜெகதீசன்
105. ஏ டி வரதராசன்
106. கவிநெஞ்சன் இராசகோபால்
107. அப்பு ராஜகுமார்
108. தேவிபாலா
109. துரைராஜ், ஆடுதுறை
110. வானதி சந்திரசேகரன்
111. கோ. பூமணி
112. அனிதா ரவி
113. சிவம் முத்து
114. விக்கிரமன் சீனுவாசன்
115. லீலா லோகநாதன்
116. பென்ஸ் பிரான்சிஸ்
117. பூநகர் சாந்த்
118. கலைவாணி சுரேஷ்பாபு, துபாய்
119. இளவல் ஹரிஹரன்
120. கிறிஸ்டி ரெவல்
121. கார்த்திகேயன் இராமச்சந்திரன், மதுரை
122. அசோகன் குப்புசாமி
123. தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு
124. சபீதாபேகம்
125. அன்புவல்லி தங்கவேலர்

126. சுதா செழியன்
127. செல்வா ஆறுமுகம்
128. ஆறுமுகம் சபாபதி
129. மீனாட்சி சுந்தரம்
130. எஸ் சந்தானலட்சுமி
131. கவிதாஞ்சலி
132. சீமா ஸ்ரீராமன்
133. வாசன் சாவி
134. நந்தகுமார் இராமசாமி
135. எம். ஆர். ஜெயந்தி
136. இரா. கவிதா. திண்டுக்கல்
137. படைப்பாளி பைரவி, புதுச்சேரி
138. ரேணுகா சுந்தரம்
139. தமிழரசி முத்துசாமி. (வேகவி.)
140. ரா. கார்த்திகேயன்
141. கா. ந. கல்யாணசுந்தரம்
142. மலர்செல்வி
143. இராம வேல்முருகன், வலங்கைமான்

1

கோப்பையிலே பழரசமா?
கோலமயிலோ துணைவருமா?
தேவதைக்குத் தேநீரா?
தேவையெனில் தருவீரா?

கவிஞர் சிவ எம்கோ, வாழப்பாடி

2

காலை நேரப் புத்துணர்ச்சிக்குக்
கோப்பையிலே வேண்டும் சூடான தேநீர்!
குடிக்கக் குடிக்கச் சுவையாகும்!
குடித்த பின்னே மனம் நிறைவாகும்!

ர. உஷாராணி, சேலம்.

3

களைப்பின் மிகுதியால் சோர்வுற்ற உடலும்
இளைப்புற்ற மனமும் புத்துணர்ச்சி பெற்றிடுமே
சூடான குழம்பியை உதட்டில் உறிஞ்சி
நாவால் சுவைத்திட நாளும் இன்பமே !

வள்ளல் இராமமூர்த்தி

4

குவளைத் தேனீரும்
அதிகாலை குளிரும்
இதழ்கள் உறிஞ்ச
இதமாய் உள்ளிறங்குமே....

தமிழ் பாரதி

5

தூக்கம் களைக்கத் துணைவரும் தேநீரே
ஏக்கம் பிறக்குதே எப்பொழுதும் ஊக்கமோ
தாக்கமோ உன்னையே தேடுதே வாட்டத்தைப்
போக்கிடும் ஆழ்ந்தருந்தும் போழ்து..

மைதிலி தயாளன்

6

காலையில் எழுந்தவுடன் மனம் தேடும்
அலை அலையாய் மனம் ஓடும்
களைப்பின்றி நாள் முழுதும் பாடும்
விளையாட வாழ்க்கைக்குத் தேவை சுகம்

ஜெயசீலி தயாளன்

7

தூக்கத்தையும்
துக்கதையும்
தொலைத்தெடுக்கும்
குண்டு!!

மோகனகவி

8

காலை எழுந்தவுடன் காபி
மாலை என்றால் தேநீர்
கற்பனை நெஞ்சில் சுரக்கும்
கவிதை நாவில் பிறக்கும்

கேசவதாஸ் சுசீந்திரம்

9

ஆஹா தித்திக்கின்றது...
நாணத்தோடு சொன்னது
அவள் இதழ் தொட்ட
தேநீர் குவளை!

முத்து நகர் முத்து குமார்

10

காலையிலும் மாலையிலும்  களைப்புறும் போது
உள்ளம் களிப்பற வேண்டுமே நித்தமும்
பொருளிருப்போருக்கு சுவை நீராகவும்
இல்லாதாருக்கு பசியாற்றும் நீராகம் ஆகிறது

குமாரி சேது

11

எண்ணத்தின் எழுச்சி எழுத்தில் புத்துணர்ச்சி
காலைப்பொழுது மலர்ச்சி தந்திடுமே மகிழ்ச்சி
காற்றாட நடந்தபின் பருகிடவே
தேநீர்.மனதுக்கு எழுச்சி.

தாராபாய் மதனகோபால்

12

உறிஞ்சத் துடிக்கும் மனதோ இளசு
ஒவ்வொரு துளியிலும் உருகுது மனது
சூடேற்றும் சுகமும் இளங்கலைப் பொழுதும்
பாவேற்றப் பதமே பழகுவது இதமே

பாளை பால்கி

13

சூடாகப் பருகச் சுழன்றிட வைக்கும்
பருகாது போனால் புலம்பியே தீர்க்கும்
ஆறிய பின்னும் ஆறுதல் பிறக்கும்
அன்பானவர் கூறுவர் பனித்தேனீர் நானென

சக்திராஜ்

14
குவளையில் தேநீர் குதூகலிக்கும் மனது
கவலையை மறக்கடிக்கும் கடமைக்கு வழிகொடுக்கும்
உள்ளம் உணர்ந்து உறிஞ்சிய சிறுதுளி
பள்ளம் நிறைக்கும் பரவசம் காட்டும்

ம. பழனிச்சாமி, திருப்பூர்

15

மிச்சம் விட்டுப் போயிருக்கிறாள்(ன்)
அவனு(ளு)தட்டின் வெப்பத்தை யான்தீண்ட....
நிச்சயம் மகரந்த மலர்கள் பூப்பதே
வண்டினை ஈர்க்கத்தானே... வண்டாய் நான்

சௌ நாகநாதன்

16

கண்டதும் அழைக்கிறான் வா..தேநீர் பருகலாமென..
தீருகையில் தித்திப்பின் கூடல் நீடிங்க..
கோப்பையை விட்டு  பிரியமனமின்றி உதடுகள்
கண்களும் காட்டிக்கொடுக்கின்றன ஏக்கத்தின் துளிகளை..

முருகேஸ்வரி ஆறுமுகம்

17

கவனத்தை திசை திருப்பாது
இரசித்துச் சுவைக்க
மனதில் சோம்பல்
களைந்திடும் சுறுசுறுப்பிலே

சென்னிமலை சீனிவாசன்

18

தேனீர் பானம் தேமதுர திரவம்
சோம்பலை முறிக்க காலையில் வந்திடும்
கடமுடா வென்றே வயிற்றை சுத்தமாக்கும்
கசமுசா ஆகாது சீராக்கும் நாளை.

கு. கதிரேசன், திருச்சி

19

பூந்தேனா?  புதுத்தேனா..!
பூவையின் பூமகள் அவளின் இதழ்தேனா?
புரியவில்லை அதனால்
அருந்தவில்லை.

ஜி அசோகன், பம்மல்

20. அவளும் பாலும்...

*ஆறிய தேநீர் அடிக்கடி கொதிக்கிறது/
அருந்திட அவளின் நினைவுகளும் உதிக்கிறது/
*வற்றிய கோப்பையாகிக் கழுவிக் கவிழ்த்தும்/
பாலின் வாசனையாய் காதலும் மணக்கிறது//

மா. பாலசுந்தரம்

21

அவள் கொடுத்த
தேநீரின் சூட்டில்
குளிர்ந்து போனது
என் மனது...

இராஜ்குமார் சிவன்

22. நீயின்றி நானில்லை

இதழ் உரசி என்னுள்
இதமாய்க் கலந்தோட
மேனியெங்கும் பாய்கிறதே
மின்சாரமாய் ஒருபுத்துணர்வு !

இரா. பேச்சியம்மாள், கரிசல் கானம்

23

காலையும் மாலையும் புத்துணர்ச்சியைக் கூட்டும்
தேநீர் கொஞ்சம் குவளையில் இருக்கு
இதழ் வைத்து உறிஞ்சிட இதமாயிருக்கும்
கதகதப்பு நீங்கி வெதவெதப்பைக் கொடுக்கும்

கே பி துரைசாமி

24
சுவையான தேநீர் கூட
இனிக்கவில்லை
அவனின் நினைவுகளாலே...

இரா தேவி

25

உரைத்த பொய்கள் ஓடியே ஒளிய
செரித்த உணவும் சேதிகள் சொல்ல
நரைத்த கூந்தல் நற்காதல் சொல்ல
சாட்சியாய் ஆனதே தேநீர் ..!!

மன்னைஜீவி

26

கையில் கோப்பையைப்
பற்றியவுடன் தேன்நீர்...
சுரக்கும் வாயினில்
பறந்தோடும் சோர்வும்...

நெடுமுடி வேந்தன், சென்னை

27

உறக்கம் தொலைத்து உற்சாகம் கொடுக்கும்
பறக்கும் மனது பரவசம் அடையும்
சிறக்கும் காலை சிந்தை எழுச்சி
மறக்க இயலா மாண்புறு தேநீரே

இரா லெட்சுமணகுமார், ஈரோடு

28

சோம்பல் தீர்க்க சோர்வை நீக்க
காலையில் சூடு பறக்க வந்தாள்
அனலாய்க் கொதித்த மனதும் அடங்கியது
அன்பால் நிறைந்து அகத்தில் நுழைந்தாளே

முத்தமிழ்செல்வி, நத்தம்

29

நான்
காத்திருக்கிறேன்
மனிதனுக்காக அல்ல
ஈக்களுக்காக

பிரின்ஸ் லூயிஸ் பாஸ்டியர்

30

சீனாக்காரன் குவளையிலே
இரண்டாம் தர தேயிலை நீர்
உறிஞ்ச உறிஞ்ச
இதமாகுமா?

மேலூர் முருகானந்தம்

31

தேனை தேடிச் செல்லும் தேனீக்கள்
தேவை இல்லை என்றாலும்
தேநீர் தேடிச் செல்லும் மனிதர்கள்
தேவாம்ருதம் கலியுக தேவாம்ருதம்..!!

பசீர்அகமது

32

கோப்பையின் தேநீரே
என் களைப்பின் மருந்தே நீ!
பருகினேன் உனைநானே
பாக்கியசாலி ஆனேனே!

ராசா

33

இதழ்களின் இடையில் இதத்தை தந்து
நாவின் சுவை நரம்புகளை தூண்டிவிட்டு
தொண்டைவரை சூட்டை பகிர்ந்தளித்து
புத்துணர்வை பரவச்செய்யும் தேநீரே

மணிமாறன்

34

கோப்பையில் குடியாகிக் கோகிலமாய்க் கவியிங்கே
தோப்பத்திற்கு ஆதாரம் தோற்றிடாத நெய்யாமே;
காப்பதற்கும் கவிழ்ப்பதற்கும் காட்சியதே சாட்சியாகுதே;
ஏப்பச்சுரம் காணாது ஏந்தருந்தும் நேரமிதே!

மருத்துவகவிஞர் பெ. தி. சுகுமார்

35

களைப்பைப் போக்கிடும் சுறுசுறுப்பாய் ஆக்கிடும்
அளவாய்ப் பருகுவோம் அல்லலை ஓட்டுவோம்
எழுச்சியை ஊட்டிட எழுகாலை வேணுமே
நாவினால் சுவைத்திடும் ஏழையின் பானமே

மு. வா. பாலாஜி

36

எத்தனை முறை அலசிப் பிழிந்தாலும்
வாசமும் வாசனையும் மாறா
மலைமகளின் முந்தானை வாசத்தில்
மண் மக்களின் உற்சாக விடியல்

ஜெ பாக்கியவான், புள்ளம்பாடி

37

இலைகளின் சாரமாய் இதழ்களின் ஓரமாய்த்
துளித்துளியாய் உள்ளிறங்க தெம்பு வருகுதே
களைப்பெல்லாம் போக்கி கண்ணுறக்கம் தவிர்க்குதே!
உழைக்கும் மக்களுக்கு உற்சாகந் தருமமுதமே

விஜயா குமரன்

38

அன்னை கையால் அமுதமாக
அதிகா லையில் குடித்துவிட்டால்
அன்று முழுதும் உற்சாகம்
அளவே இன்றி கிடைத்திடுமே.

ராமதாசு தென்பசியார்

39

நாதன் நான் குடிக்க பாதாமோ
நாவில் நீர் சுரக்கும் தேனீரோ
பாதி நீ குடித்த மிச்சமோடி
இதைக் கண்டது உற்சாகம் பிறக்குதடி...

ஹரிகுமார் வேலாயுதன்

40

கோப்பைத் தேனீர்
குதூகலம் தந்திடும் ,
யாப்பில் கவிதை
யாத்திட வந்திடும் !

தாரமங்கலம் முத்துச்சாமி

41

வண்ண மிளஞ்சிவப்பு, வாழ்க்கைக்குத் தேவையிதே,
எண்ணெய்மே லாடும்; எவர்க்கும் ஒளிகொடுக்கும்,
ஆநீர் அடங்குமே ! ஆடிடும் கோப்பை யதிலுள்ள
தேநீர்க் கிணையாகும் தீ.

இராஜா கிருஷ்ணன்

42

நீராகாரம் நீர்க்கச்செய்த
ஆதிக்கப் பேராகாரம்...
ஹேய்...இது ப்ரூடா...!

வள்ளிக்குறத்தியார்

43

விடக் கோழியின்
சாருக்கென காத்திருக்கிறது
சொக்கில் ஆட்டிய
நல் எண்ணெய்யும்....

மகேஷ்கண்ணன்

44

சோம்பலை தீர்த்துவிடும்
சூழ்நிலையில் தெம்பு தரும்
அடிமையாக நமை ஆட்டும்
அருந்துகின்ற உற்சாகப் பானமிது.

கருங்கல் கி கண்ணன்

45

களைப்பைப் போக்கும் கனிவுடை தேநீர்
காலை மாலை கட்டாயத் தேவையாய்
உழைக்கும் மக்களின் உற்றநற் றோழன்
உணவே தேநீர் உலகின் நடப்பே.

பொ. முத்துராக்கு

46

ஐம்பது வயது வரை  ஆனந்தம்
அதுவே ஆபத்து இவ் வயதில்
என அருந்தாமல் இருந்து நம்
உயிரைக் காப்போம் என்ற உறுதியில்.

பொ. சுப்புலட்சுமி, தேவகோட்டை

47

அவளிதழ் சொரிந்த மதுரசம் தாங்கிய
பீங்கான் கோப்பையும் புத்துணர்ச்சியோடு
இதயம் கவரும்
போட்டியில் இன்ப உலா ...

சோமசுந்தர்ராஜன்

48

அவள் இதழ்தொட்ட மிச்சம் அழைத்தது
அவன் பருகிட ஆசைகள் பூத்தது
தேநீர் எப்படி தேனாய் சுவைக்கும்?
தேவதையின் தீண்டலோ தேடல் தொடருதே!

அருண்மொழி

49

கோப்பையும் கோப்பையின்
அடர் நிறத்தினுடனான தேநீரும்
முப்பரிமாண ஓவியமாக
ஒன்றையொன்று உவமித்துக்கொள்கின்றன.

சி. அ. வ. இளஞ்செழியன்

50

குவளையில் இருக்கும் குடிநீர்...
குடித்திடப் பெருகும் குதூகலம்...
மிடறுகளாய் அருந்திட அயற்சியில்லை...
மிடுக்காய் மிளிரும் உணர்வுகளே...

சுந்தர ராஜ சாரதி

51

பொன்னைக் கரைத்துப் பூங்கிண்ணம் நிறைத்து,
அன்ன மவள்தர அங்கே உதிக்கும் மின்னல்
சுவைக்க விந்தை பிறக்கும்!
கண்ணில் கனவும் களிநடனம் புரியும்!

தனராஜ் பாப்பணன்

52

நீ இன்றி நானும் இல்லை
என் காதல் பொய்யும் இல்லை.
வழி எங்கும்
உந்தன் முகம் தான்.!

உஷா வரதராசன்

53

வெள்ளைக் கோப்பை தனில்
வெறித்துப் பார்க்கிறது தேனீர்
உள்ளம் கொள்ளை கொள்ள
உதட்டில் சுரக்கிறது உமிழ்நீர்.!

ஹாரூண் ரசீத்

54

எடுத்துக் கொள்ளேன் களைப்பு நீக்க.
விடுக்கிறதோ அழைப்பு வருடும் தென்றலாய்
அடுத்தடுத்த பணிகளால் ஆகிடும் மனஉளைச்சல்
சூடான பானகம் சுறுசுறுப்பைத் தந்திடும்.

மகேஸ்வரி முருகையா

55

மஞ்சள் நிற திரவம்..
மானுடம் பருகும் திரவம்..
மனதின் மயக்கம் நீக்கும்..
மனதில் புத்துணர்ச்சி தரும்..

கா சதாசிவம்

56

காலை எழுந்ததும் மனது தேடுவதும்
இளஞ்சூட்டில் இயற்கையை ரசித்து கொண்டே
சொட்டுச் சொட்டாக நாவை முத்தமிட்டு
இதமாய் இறங்கிடும் தேநீரென் காதலியே

ஏஞ்சல் சோபிதா

57

பாதி தேநீராலும் மீதியைக் காற்றாலும்
நிரப்பிய கோப்பை
வாழ்வின் இன்பத்தையும் துன்பத்தையும்
ருசித்து வாழச் சொல்கிறது.

குளோரி சக்தி

58

மனம் கவரும் மானசீக பானம்
தினம் உணரும் மணம் வீசும்
இன உணர்வாய் எழுச்சி தரும்
கண்முன்னே காய்ச்சித் தரும் தேநீர்

கவிஞர் பொற்பனை சுப்பிரமணியன்

59

குவளைத் தேனீர் குளிரைப் போக்கிடும்
கவலை மாற்றிடும் களைப்பு நீங்கிடும்
அருந்த வாரீர் அன்பும் கலந்ததால்
விருந்தென ஆகிடும் வேண்டல் முடிப்பீரே.

ப. முருகன் யோகீஸ்வரர்

60

சுறு சுறுப்பை தரும்..
சுகமான நாவிற்கு சுவை கூட்டும்..
உற்சாக பானம்...

சிந்தை வாசன்

61

காலைமாலை எண்ணாது பாலோடு முயங்கி
ஆடையினை அகற்றி அனுதினம் முத்தமிட
தேயிலையின் ஐயத்தில்  தழல்மீது சிதையேற்றக்
கள்ளத்து உறவெனினும் உள்ளத்தில் உவகையே

வேங்கை மார்பன்

62

எத்தனையோ பாட்டாளியின் பசி அடக்கிய.
நான் உனக்குப் பசி அடக்க மாட்டேனா ?
வேல்முருகா கவிதை எழுது விழித்திருக்க
என்னைப் பருகு துணையிருப்பேன்!

குமரன் அம்பிகா

63

குவளை ததும்பும் கடுநீர் அதனில்
கவலை மறந்தும் கரைந்துமே போகுது
தேன்போல் இனித்திட தேகமும் இனிக்குது
வான்போல் மனமும் விரிவு.

தமிழீழநேசன்

64

உதட்டுச் சாயம் வெளுத்து உறிந்ததில்
உள்ளுக்குள் இறங்க உள்ளம் மகிழ்ந்தது
பறிமாறிக் கொண்டதில் மறந்தது அத்தனையும்
இதழ் தொட்டதில் இறுதியாய் இனித்தது

விஜி கல்யாணி

65

உன் இதழ்களின் ரேகை அச்சிடப்பட்ட
தேனீர் கோப்பையின் சொந்தக்காரன்
பிறவிப்பயனை அடைந்ததை நீ
அறிவாயோ கண்மணி

முருகன் ஊர்க்காவலன்

66. தேனீர்

தேடிப் பருக வைக்கும் தேவையின்றி காக்க வைக்கும்
விருந்தினரை உபசரித்து விட்ட உறவைப் புதுப்பிக்கும்
உதடுகள் முத்தமிட்டு உடல்முழுவதும் பரவவிட்டு
உற்சாகப் பானமிது உணராதவர் யாருமிலர்!

ஆன்றனி அமலா

67

உதட்டின் ரேகை உலரும் முன்னே
அன்பை நானும் அவளுக்குக் காட்டிட
மிச்சம் வைக்காது முழுவதையும் குடிப்பேன்
எச்சில் பதித்த  என்னவளின் நினைவோடு.

மருத்துவர் ஜெயக்குமார் பலராமன்

68

தேனீர் கோப்பையில்.
விழுந்து கிடக்கிறது.
என்னவளின் உருவம்.
ஒரே உறிஞ்சு தீர்ந்தது.

சாக்கை. பொன்னழகு

69

குவளையின் இடையைப் பிடித்து குனிந்து
இதழ் பதித்து  இறுகப் பற்றி  உறிஞ்சத்
தேன் நீரும்  சூடாகித் தேனீராய்த்
தேகமெல்லாம் உற்சாகத் தேரோட்டம்

வி. கண்ணையன்

70

மனதை வளைக்கும்! கவலை ஒடிக்கும்!
கவனம் சிந்தையில் ஓர்முகம் செலுத்தும்!
நாடி நரம்பினில் முறுக்கினை ஏற்றி!
செயல்தனில் வீரியம் தருமிந்த தேநீர்!

அ. பாண்டுரங்கன்

71

அலுவலகம்
சென்ற பிறகு
அப்பாவிற்காக
காத்திருக்கும் தேனீர்...

பொன் க. முத்து

72

கோப்பையில் தேநீர் பாதிதான் இருக்கிறது
காப்பியைத் தேடிக் கண்கள் அலைகிறது
வாழ்வில் பாதி வசந்தம் வருகிறது/
வாழ்க்கைத் தத்துவம் இதனில் தெரிகிறது

சியாமளா பாலகிருஷ்ணன்

73

ஒரு கோப்பையும் கொஞ்சம் தேநீரும்
உனக்கு பிடித்தமாக ஒற்றைப் புள்ளி மட்டும்
வைத்து விட்டு நகர்கிறேன்
மிச்சத்தை நீயே முடித்து வைத்து விடு..!

கவிதைகள் புதுக்கவிஞன்

74

துள்ளி எழுந்து துயில் கலைந்து
துள்ளல் இசையோடு  தூங்கிய மனதைத்
துவசம் பண்ண. தெவிட்டாத மணத்தோடு
தேவை இக்கணம் சூடான தேனீர்

ஆனந்த் கந்தசாமி

75

தேநீர் கலந்த பாலின் சுவையைத்
தேசம் விரும்பும் தேகம் செழிக்கும்
தேநீர் தருமெம் தேயிலைத் தொழிலோர்
தேறா வாழ்வில் தேம்பும் மக்களே!

திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி. இலங்கை.

76

என்னவளின் சங்கு கழுத்தில்
லாவகமாய்ச் சென்றிட.... உற்சாகம்
செவ்விதழை உன்னதமாய் உறவாடிட
நின்னைத் தவிர வேறு யார் இந்த பாரினில்....

சுஜாதா அருணாசலம்

77

மாலை நேரத்து மயக்க மருந்து
பாலைச் சேர்த்துப் பருக விரும்பு
இதழ்கள் சுவைக்கும் இனிய விருந்து
நுதலில் அரும்பும் நீரின் அரும்பு.

க. தங்கவேலு

78
உழைத்துக் களைத்த உடல் தெம்புபெறச்
சுவைத்துப் பருகினால் சூடாகத் தேனீரைத்
தேனீயைப்போல் சுறுசுறுப்பு நாடிநரம்புகளில் ஏறுமே
மனமும் குணமும்மாறிச் சூழல்நிலை மாறுமே.

கி. மா. கனகராசன்.சூலூர்

79

மணமும் காற்றில் நாசியைத் துளைக்கச்
சுவையும் நாவில் நின்றே இனிக்கக்
குழம்பியால் குழம்பிய மனமும் நிம்மதியாகச்
சற்றே ஓய்வை தந்திடும் வாழ்வில்.

இந்திராணி தங்கவேல்

80

தாயும் மனையும் இல்லாமல்
தனியே வாழும் மனிதர்க்கு
டீயும் பன்னும் டிபனாகும்
சிங்கிள் டீயும் உணவாகும்

புகழேந்தி

81

இரு மனங்கள் ஒன்று சேரும்
பருவ வயதுக் காதல் என்று
கருவாக உருவாகிக் கவிதை உதித்தது
ஒரு கோப்பைத் தேநீர் அருந்துவதற்குள்

சோ. மீனாட்சிசுந்தரம்

82

ஆணிடமும் முத்தங்கள் பெறுகிறாய்
பெண்ணிடமும்  முத்தங்கள் வாங்குகிறாய்..
ஆடையற்ற நீரினை அடைத்து வைக்கிறாய்
தாகம் வரும் போதும்  மோகமாய் வந்து மோதிகிறாய்..

முத்து ராஜசேகரன்

83

களைத்துப் போயிருக்கும்
முகத்தில் தண்ணீர்த் தெளித்து
உற்சாகமெனும் கோலம் போடுகிறது
ஒரு கோப்பை தேநீர்

செந்தூர் குமார்

84

மஞ்சள்  நிலவு
உறைந்தே  இருக்கிறது
நீ  விட்டுச்  சென்ற
அந்த தேநீர்க் கோப்பையில்

சு. கேசவன்

85

இரவுக்கேத்த போர்வை -அவள்
இதழை சுவைக்கும் வியர்வை--உடற்
சோர்வை தணிக்கும் காலை-பகல்
பசியை போக்கும் வேளை- இனிப்பைச்
சுமந்து வரும் குவளை.

மாரியப்பன் ஊர்க்காவலன்

86

மஞ்சள் கருவிற்கு
வெள்ளைக் கரு காவல்
கோப்பை வடிவ முட்டை
இட்டது யாரோ?

ஆண்டாங்கோயில் தேவநாதன்

87

என் இடையின் அழகை கண்டு
பார்த்து பிடித்து அருந்தி விட்டு
கவிதை எழுதத் தொடக்கம் ஆனதே

அம்பிகா குமரன்

88

மாலைப் பொழுதின் மயக்கம்
தேநீர் மணத்தின் கிறக்கம்
உதட்டுச் சுவையில் உற்சாகம்
தினமும் தொடரும் பழக்கம்

சு வெ சுவாமி

89

டீ என எவனோ அழைத்தவுடன் ,
ஆடை போர்த்திக்கொண்டாயோ
அரையாய் இருந்தாலும்,
அறைக்குள் இருந்திருக்கலாமே!

செல்வபாண்டியன்

90

இதமான சூட்டில் இதழ்களைத் தழுவிட
சுகமாகும் சுமைகளுக்குச் சிறிது இடைவேளையில்
தனிமையைத் தவிர்த்தே தாகம் தீர்க்கும்
சில நினைவுகளோடு  சிறு வினாடியில்
பிரிந்திடுமே  தேனீர் குடுவையோடு

ரா. ரேகா ராஜகுமார்

91

கோப்பைத் தேநீர் பருகத் துடிக்கும்
கோடையில் இதுவே வெறுப்பைத் தந்திடும்
அடைமழை காலத்தில் ஆவல் கொண்டிடும்
அதுவே மனத்தை எழுப்பும் மருந்துமாகும்.

வா. சண்முகம்.

92

சுறுசுறுப்பைத் தரும் சூடான தேநீர்
நறுமணமும் சேர்ந்தால் நாசியும் சுவைக்கும்
பழக்கமாகக் கொண்டால் பாடாய்ப் படுத்தும்
இழக்க வேண்டாம் இன்சுவை உண்மையே!

ஓசூர் மணிமேகலை

93

நோய்க்கு கசாயம் அருந்தக் கசக்கும்
காய்ச்சல் அறிகுறி எதுவும் இல்லை
தாய்மொழி பற்றி தவறான கருத்தே
வாய்ப்பேச்சு வித்தகமாகி வம்பு வந்ததோ

கோபால் சத்தியமங்கலம்

94

தேனீரா இல்லை தேன் சாரா
தேகம் சிலிர்க்கும் செந்நீரா
இலைநீரா இல்லை இளநீரா
இதழை வருடும் பன்னீரா..

கவிஞர் பி புகழேந்தி

95

கோப்பையின் வாயில் குனிந்து மெல்ல
மூடித் திறந்து முத்தமிட வந்ததே
தேனாய் இனிக்கும் தேநீர் இதழில்
சிந்தையில் நிறைந்து சுவைத்திட ஆனந்தராகம்

பாண்டிச்செல்வி கருப்பசாமி

96

இப்படியும் கவியெழுத இனியகாலைப் பொழுதினிலே
செப்பறியச் செழுந்தமிழில் சிறப்புறவே வகைசெய்த
ஒப்பரிய வலங்கைமான் உயர்வேலன் தமிழ்ச்செம்மல்
எப்பொழுதும் மனங்கவரும் இனியதமிழ் நறுந்தேனே!

கவிஞர் செகவான்

97

துள்ள லெழும்பும்; துயிலை விரட்டிப்பின்
அள்ளுமே ஆற்றல் அளவின்றிக் – கொள்ளவும்
பக்கத்தில் கோலமயில் பார்த்துவந்து புன்னகைக்கச்
சிக்காதோ அத்தேநீர்ச் சிந்து?

விசு இமானுவேல்

98

தூரத்துத் தென்றலிலும் தூறல் மழையிலும்
திகட்டாதச் சுவையால் திண்டிய நாவினிலே
திட்டமிட்டு ஒட்டிக் கொண்டது
தெருவோரக் கடையில் அருந்தியத் தேநீர்...

மருத்துவர் தேவி

99

காலையும் மாலையும் கட்டாயத் தேவையால்
அருந்திடும் தேனீரோ அற்புத பானம்தான்
சூட்டுடன் எடுத்துச் சுவையுடன் பருகிடச்
சோம்பலும் பறந்து சுறுசுறுப்பு வந்திடுமே

அ. வள்ளிபாபு

100
மிஞ்சும் அளவுக்கு விட்டு வைத்திருக்கும்
என்னவனின் மூச்சுக்காற்று யான் சுவைத்து
அவசியம் இரசிக்க உள்ளம்பூரிக்கும் அழகே
ஈர்ப்பால் தானே காதலியாக நான்

யமுனாராணி

101

பசி போக்கும் எளிய மருந்து,
தாகத்துக்கும் பசிக்கும் தன்னிறைவு தரும்,
ஒருவேளை சோறு ஒதுங்கிக் கொள்ளும்,
உணர்ச்சித் ததும்பலின் துள்ளல் பானம்!

கோவி சண்முகசுந்தரம்

102

குழம்பிப் போனால் குடிக்கச் சூடாய்க்
குழப்பம் தீர்க்கும் குவளைக் குளம்பி!
படுக்கும் முன்னே அவளும் கொடுக்க
கொடுக்கும் இன்பம் குடித்துப் பாரேன்!

ஆர் குணசேகரன்

103

ஒரு குவளைத் தேநீர் நீயும் நானும்
அருந்தும் இடைவெளியில்
நமது காதல் அழகாக
வலம் வருகிறது

தென்றல்கவி

104

தூக்கமும் போகுமே துக்கம் மறந்திடும்
ஆக்கம் தருமே அலுப்பிலாமல்- ஊக்கம்
வருமே, உழைத்திடும் வர்க்கத் துணையே,
அருமையாம் தேனீர் அது...!

செண்பக ஜெகதீசன்

105

இடைவெளிகளை அழகாக நிரப்பி
எதிரெதிர் சுவைகள் இருந்தும்
இனிக்கின்ற. தேனீரே அதை
எனக்கும் கற்றுக் கொடேன்...

ஏ டி வரதராசன்

106

ஊக்கம் தருகின்ற உற்சாகத்  தேநீர்
ஏக்கமாகிப் போகும் என்றாவது ஓரிருநாள்
ஆக்கமுடன் பணிபுரிய ஆழ்ந்துபல சிந்திக்கத்
தாக்கம் அதிகரிக்கும் தாங்கொணாத் துயரத்தாலே

கவிநெஞ்சன் இராசகோபால்

107

உள் நாக்கில் லேசாய் கசக்கும்
பில்டர் காபியாய் உன் ஊடல்
உள் மனதில் கசந்தாலும்
நீயில்லாது எனக்கு விடிவதில்லை.

அப்பு ராஜகுமார்

108

கொதிக்கக் கொதிக்கவே உள்ளிறக்கினால்
சட்டென்று குளிர்விக்கிறாய் மனதை...
முகத்தில் ஆபத்தான
அமைதியை வரவழைக்கிறாய்...

தேவிபாலா

109

குளம்பியை நான்
கோப்பையில் கண்டேன்...
சோர்வுற்ற உடலும்
புத்துயிர் பெற்றது...

துரைராஜ், ஆடுதுறை

110

ஆவி பறக்க அருந்தினால்
குழம்பிய மனதையும்
குதூகலமாக்கும்  குளம்பி!

வானதி சந்திரசேகரன்

111

உடலின் சோர்வுக்கு உற்சாக பானம்
படர்ந்திடும் போதிலே  புத்துணர்ச்சி புலனாகும்
கடந்திடும் கவலைகள் கலைத்திடும் கோப்பைகள்
சுடர்மிகு மதியினைச் சுவையால் ஈர்த்திடுமே.

கோ. பூமணி

112

கோப்பைக்குள் குடிகொண்ட குளம்பியே
என் நாவைத் தொட்டுவிட்ட சுவையே
நடுக்குற்ற குளிரில் இதமான போர்வை
அதிகாலை எனை எழுப்பும் சுடரே...

அனிதா ரவி

113

ஒருகோப்பை தேனீரைச் சூடாய் அருந்திடவே
உருவாகும் உற்சாகத்திற்கு ஈடாய் ஒன்றில்லையே
தருவார் மனைவியென்ற தவிப்பும் பெரிதாகவே
பருகத் துடிப்போமே பகலவன் எழுந்திடவே.

சிவம் முத்து

114

தூக்கத்தைக் கெடுத்து கவனச்சிதறலை உண்டாக்குது
இரும்புச் சத்தையே சேராது தடுக்குது
«ஹீமோதெரபி « பயன்பாட்டைசெயல்படாமல் செய்யுது
முந்திடுதே மூட்டுவலி தேவையா இக்குடி

விக்கிரமன் சீனுவாசன்

115

உதட்டோடு உறவாடும் உற்சாக பானம்
உள்ளுக்குள் சென்றதும்
ஊற்றெடுக்கும் உள்ளத்தில்
ஊட்டச்சத்து கவிதைகள்...

லீலா லோகநாதன்

116

ஒரு கோப்பைத் தேநீர்
ஒவ்வொரு மடக்கும் தருகிறது
தனிமையில் இனிமை

பென்ஸ் பிரான்சிஸ்

117

உடல் கசகசத்திட உழைத்து
மனம் பதைபதைக்கும் நேரம்
தேனீர் சுடச்சுட அருந்திடும் பொழுது
நினைவுகள் பளபளத்தது அவளாளே...!

பூநகர் சாந்த்

118

பதமாய்ப் பறித்துப்  பக்குவம் செய்ததைக்
கொஞ்சம் சர்க்கரை நிறைய காதலுடன்
பாங்காய்ச் சமைத்துக் கோப்பையில் ஊற்றிடப்
பருகிடத் துடிக்கும் உனது இதழ்கள்

கலைவாணி சுரேஷ்பாபு, துபாய்

119

தேநீரின் நிறத்தில்
தெரிகிறது தேயிலை
பறித்த விரல்களின்
வலியும் வேதனையும்

இளவல் ஹரிஹரன்

120

காலைப் பொழுது
கண்விழிக்கும் நேரம்
கலவையில் சுவையாய்
கன்னியின் பரிசு

கிறிஸ்டி ரெவல்

121
வெண்ணிறக் கோப்பையில்
பொன்னிறக் குளம்பி
என்னிதழ் நனைக்கையில்
கண்ணிமை சொருகுதே....

கார்த்திகேயன் இராமச்சந்திரன், மதுரை

122

தேயிலைக் கொழுந்து
கொய்ததில் எத்தனை
கொழுந்து பிள்ளைகள் வாடினவோ

அசோகன் குப்புசாமி

123

தேநீர் அருந்தினேன்
தேநீர் மட்டுமல்ல தேநீருடன்
உன்னையும் என் கண்களால்... அடடா!!
இதயம் வரை இனிக்கிறதே என்ன!!
சர்க்கரை அதிகமானத் தேநீராய் நம் காதல்!!!

தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு

124

நீயின்றி என் பொழுதும் விடியாது!
சோர்வின்றி உழைத்திடவே
நீ வேண்டுமென்றால் அது மிகையாகாது!

சபீதாபேகம்

125

ஒரு பத்து மிடறு இருப்பாயா தேநீரே
ஒவ்வொரு முழுங்குக்கும் எத்தனை அக்கப்போர்கள்
ஊர்ப் புறணி உலக அரசியல்
கிசுகிசுக்கள் இலக்கியம்
வெட்டித்தனம் விடலைத்தனம்
எத்தனை புறப்படுகின்றது
நீயே அறிவுச் சுரங்கம்
சூடும் சுவையும் சுறுசுறுப்பும் நல்கும் நீ வாழ்க

அன்புவல்லி தங்கவேலர்

126

கோப்பையில் மிச்சம் இருக்கும்
நம் நாக்கின் சுவை _
கோப்பை அறியாமல்
நம் காதலும் இருக்கும் நிறையவே!

சுதா செழியன்

127

தேநீரில்  சர்க்கரை போட மறந்துவிட்டாயென
நீ சொல்லித்தான் தெரிகிறது...
தேநீர் நீ போட்டது  நீ என்பதால்
தேவையில்லை சர்க்கரை...

செல்வா ஆறுமுகம்

128

சோர்வை உள்வாங்கி சுறுசுறுப்பை வெளியிடுமே
புத்துணர்ச்சி  புதுப்பொலிவு  பிறக்க வழியாகுமே
பணியோ படுவேகம் கண்டு மகிழுமே
பார்ப்போர் கண்டு வியந்திட செய்திடுமே.

ஆறுமுகம் சபாபதி

129

உதடுகள் விரும்பும்
திரவக் காதலி இவள்
உள்ளம் தொடும்
ஊக்கத் தேநீரே...

மீனாட்சி சுந்தரம்

130

காலை நேரத்து ஊக்கமூட்டி!
காபின்னா தனிசுவைதான்!
துறக்க நினைத்தாலும்  துரத்தும் ஆவல்!
தொடர்கதைதான்!என்ன செய்ய!

எஸ் சந்தானலட்சுமி

131

உதடுகள் ருசிக்கையில் உற்சாகம் பிறக்குமே..
உள்ளங்கள் கனக்கையில் துன்பங்கள் மறையுமே..
வரமின்றி கிடைத்த  இனிதான அமிர்தமே..
வசியம்  செய்த  வற்றாத பானமே..!

கவிதாஞ்சலி

132

இஞ்சித் தேநீர்
இனிக்கவில்லை என்றேன்..!
அஞ்சித் தேவதை
அதரங்களால் சுவைத்தாள்..!
மிஞ்சியதோ அமிழ்தாக
மிதமிஞ்சிய சுவையுடனே..!

சீமா ஸ்ரீராமன்

133

தேனாகத் தித்திக்கும் - இதுவே
தேநீரெனில் மணக்கும் எத்திக்குப்
காணீர் கையளவு தத்துவம்

வாசன் சாவி

134

இதழ் கதவங்கள் திறக்க
நாமொட்டுகள் இரசிக்க
அமிலக் கிணற்றுக்குள்
கொட்ட நகர்கிறது தேநீர் அருவி...

நந்தகுமார் இராமசாமி

135

மௌனத்தை உறிஞ்சும் உற்சாக சத்தத்தோடு
ஒவ்வொரு தினமும்
ஆற்றப்படுகிறது தேநீரோடு
சிறுதுளிக் கவலையும்..!

எம். ஆர்.ஜெயந்தி

136

சமரசம் செய்யும் சமத்துவ பானம்
சப்த நாடிகளும் சட்டென்று உயிர்க்கும்
தொண்டையில் பட்டதும் தொய்வு நீங்கிடும்
மண்டையின் செல்களை முடுக்கும் மந்திரம்

இரா. கவிதா. திண்டுக்கல்

137

ஏழை பசிக்காக அருந்தும் பானம்
வளமானவன் ருசிக்காக குடிக்கும் தேநீர்
மக்கள் களைப்பு தீர்க்கும் சுவையாய்
உயர் தரமான உபசரிப்பு மாளிகையில்

படைப்பாளி பைரவி, புதுச்சேரி

138

தேனினிது பாலினிது என்பார் பாரினிலே!
ஒர் முறையேனும் வாழ்நாளில்
தானருந்திப் பார்க்கும்வரை/

ரேணுகா சுந்தரம்

139

காதுகள் வாங்காத குயிலின் ஓசை
கண்கள் பாரத இரட்டை மைனா
ஒற்றைக் குவளை தேனீர் நுகரவில்
இரட்டைவிரல் இன்சுவை இனிதே நாடுதே.

தமிழரசி முத்துசாமி. (வேகவி.)

140

தேநீர்.
பணக்கார்களின் சுவைநீர் ...
ஏழைகளின் உயிர்நீர்..
ஆம் பசி போக்கும் நீர்...

ரா. கார்த்திகேயன்

141

எதிர் எதிர் இருக்கைகளில்
மீண்டும் நம் சந்திப்பு
ஒரு குவளைத் தேநீர் பகிர்ந்தபடி
புரிதலோடு ஒன்றிணைவோம் வா !

கா. ந. கல்யாணசுந்தரம்

142

குவளைக்குள் அடங்கியது
குளம்பியின் கொதிநிலை
குவலயம் அடிமையாம்
குளம்பியைக் குடிப்பதில்.

மலர்செல்வி

143
எத்தனைக் கைகளின்
உழைப்பும் வியர்வையும்
என் சிலநிமிடப்
புத்துணர்ச்சிக்குத் தேநீராய்!

இராம வேல்முருகன், வலங்கைமான்

# ஒரு கோப்பைத் தேநீர்

